# நிதி ஆணைக்குழுவின் காலாண்டு செயலற்றுகை அறிக்கை
**(2019 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் திகதி தொடக்கம் செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை)**

## 1. மாகாணசபைகளின் தேவைகளை மதிப்பீடு செய்தல் (மூலதன மற்றும் மீண்டெழும்)

நிதி ஆணைக்குழுவால் மகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கமைவாக அனைத்து மாகாணங்களும் 2020 ஆம் நிதி ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் வழங்கப்படும் கொடைகளிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனத் தேவைகளை சமர்பித்திருந்தனர்.

நிதி ஆணைக்குழு மாகாண சபைகளினால் சமர்பிக்கப்பட்ட மீண்டெழும் தேவைகளை விளக்கங்கள் மற்றும் குறிப்பிட்ட மாகாணசபைகளின் செயல்பாட்டு மட்ட மாகாண பாதீட்டு அதிகாரிகளுடனான கலந்துரையாடல் மூலமும் மீளாய்வு செய்தது. நிதி ஆணைக்குழுவானது நிரல் அமைசுக்களிடமிருந்து எதிர்வரும் நிதி ஆண்டுக்கான ஆளணி பயன்பட்டிற்கான திட்டம் மற்றும் அவற்றிற்கான நிதித் தேவை ஆகியவற்றைப் பெற்று அவற்றை மீண்டெழும் செலவீனத் தேவை மதிப்பீட்டில் கவனத்திற் கொண்டது.மேலும் நிதி ஆணைக்குழு மாகாண உத்தியோகத்தர்கள் (பிரதி பிரதம செயலாளர் -நிதி, பாதீட்டு பணிப்பாளர் )மற்றும் பொது திறைசேரி உத்தியோகத்தர்களின் பாப்குபற்றுதலுடனான கூட்டங்களை ஏற்பாடு செய்தது.மாகாண சபைகளின் மீண்டெழும் தேவைகள் மீளாய்வு செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டத்துடன் அவை மாகாண சபைகளிற்கான 2020 ஆம் ஆண்டிற்குரிய தொகுதி கொடையின் தேவையாக முன்வைக்கப்பட்டது .

நிதி ஆணைக்குழுவால் மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் மற்றும் அந்தந்த மாகாணங்களின் இடைக்கால அபிவிருத்தி திட்டங்களுக்கமைவாகவும் அனைத்து மாகாணசபைகளும் தேசிய பாதீட்டின் மூலமான கொடைக்கான தேவைகளை சமர்பித்திருந்தது. மாகாணங்களால் சமர்பிக்கப்பட்ட மூலதன தேவைகளை நிதி ஆணைக்குழு ஆய்வு செய்த்ததுடன் மாகாண செயலாளர்கள் மற்றும் மாகாண பணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் அவசியமான துறைகளுக்கு துறை ரீதியான கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் அனைத்து மாகாண பிரதி பிரதம செயலாளர்களுடன் (திட்டமிடல்) துறைகளுக்கான மூலதன நிதித் தேவைகள் மற்றும் மூலதன தேவையின் இறுதி தொகையினை நிர்ணயிப்பதற்கும் விரிவான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

## 2. மேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் - 2020

மாகாணசபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு தேவைகளின் நிதி ஆணைக்குழுவால் முன்னெடுத்து செல்லப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான மூலதன மற்றும்மீண்டெழும் தேவைகள் என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு 09.09.2019 இல் சமர்பிக்கப்பட்டது பாதீட்டு பரிந்துரைகளானது 2020 ஆம் ஆண்டின் தேசிய பதீட்டிளிருந்து மாகாண சபைகளுக்கு சில நியம அடிப்படையிலும் கொள்கைகளுக்கமைவாகவும் நியாயமான முறையிலும் நிதி ஒதுக்கீடு செய்வதாகும்.

நிதி ஆணைக்குழுவின் 2020 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகளில் நாட்டின் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் நிதி ஆணைக்குழுவால் அடையாளம் காணப்பட்ட விடயங்களும் குறைபாடுகளும் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான கொள்கைப் பரிந்துரைகளையும் ஆணைக்குழு சுட்டிக்கடியுள்ளது .

## 3. மகாணசபைகளுக்கான குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடு(மீண்டெழும்) - 2019

மீண்டெழும் செலவீன பாதீட்டின் கீழ் ரூபா 4,084 மில்லியனிற்கான குறைநிரப்பு ஒதுகீடுகளுக்கான கோரிக்கைகள் மூன்றாம் காலாண்டில் ஆறு மகாணசபைகளிடமிருந்து நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றது. ஆணைக்குழுவானது இதனை கவனமாக பரிசீலனை செய்து ரூபா 3,426 மில்லியனகளை பொது திறைசேரிக்கு பரிந்துரைசெய்துள்ளது.

அதேநேரத்தில் மூன்று மாகாணசபைகளின் செலவுகளுக்கான குறை நிரப்பு கோரிக்கைகள் ரூபா 658 மில்லியன் ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் கவனத்தில் கொள்ளப்படவில்லை .

2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலண்டுவரை நிதி ஆணைக்குழுவானது மாகாணசபைகளுக்கு மீண்டெழும் செலவீனங்களின் குறை நிரப்பு பாதீடிற்காக மொத்தமாக ரூபா 10,254 மில்லியன்களை பரிந்துரை செய்துள்ளது .

**4. மாகாணசபைகளின் ஆளணி மீளாய்வு**

மாகாணசபைகளின் ஆளணி மதிப்பீடு நிதி ஆணைக்குழு முகமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இச்செயல்முறையில் நிதி ஆணைகுழுவானது தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவால் மூன்றாம் காலாண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட எட்டு கூட்டங்களில் மாகாண சபைகளின் ஒவ்வரு நிறுவனங்களின் கீழும் உள்ள ஆளணி தேவைகளின் மதிப்பீட்டின் போது கலந்து கொண்டது.

**5. நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு**

நிதி ஆணைக்குழுவின் மாதிரி சட்ட வரைபு மீளாய்வில் இருபதுடன் சட்டமா அதிபர் திணைக்களதுடன் 11.09.2019 அன்று மாதிரி சட்ட வரைபு பற்றிய கலந்துறையாடல் நடை பெற்றது. சட்டமா அதிபர் திணைக்களம் நிதி ஆணைக்குழுவின் மாதிரி சட்டவரைபின் உள்ளடக்கத்தில் கொள்கைரீதியான கருத்துக்கள் உள்ளடக்கப்படவேண்டுமென ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தது. இதற்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு சட்டவரைபு மாதிரி சட்ட வரைஞர் திணைகளத்திற்கு அனுப்பப்பட்டிருகின்றது.

**6. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2018**

2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை, நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருகின்றது. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2018 மற்றும் ஏனைய ஆவணங்கள் மேதகு ஜனாதிபதி அவர்களால் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது இவ்வறிக்கை 06.08.2019 அன்று அமைச்சரவை கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆண்டறிக்கையும் ஏனைய ஆவணங்களும் 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது .

**7. நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமை**

மீண்டெழும் செலவீனங்களுக்கான தேவை மதிப்பீட்டின் தரவு முகமைத்துவ முறையானது மூன்று கட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது i.) மென்பொருள் தேவை விபரக்குறிப்பை சமர்பித்தல் ii) மென்பொருள் முன்மாதிரியை ஒப்படைத்தல் iii) இறுதி தயாரிப்பை வழங்குதல். இச் செயல்பாட்டின் முதல் இரு கட்டங்களும் ஏற்கனவே தரவு தள உருவாக்குனர்களால் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் மூன்றாம் கட்ட பணிகள் நடைமுறையில் உள்ளதுடன் விரைவில் நிறைவு செய்யப்படும்.

**8. நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை**

நிதி ஆணைக்குழுவின் கலாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கைகள் முறையாக அரசியலமைப்பு சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்றத்திலும் சமர்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் வரையான (முதற் காலாண்டு) செயலற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் 2019 ஜூலை நான்காம் திகதி சமர்பிக்க்ப்பட்டது. இரண்டாம்

காலாண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கையும் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் திகதி அரசியலமைப்புச்சபைக்கு சமர்பிக்கப்பட்டது .

**9. நிதி ஆணைக்குழுவின் வேலை ஆய்வும் மற்றும் நிறுவன பகுப்பாய்வும்**

ஆணைக்குழுவின் முன்முயற்சி மற்றும் ஆசியா மன்றத்தின் ஆதரவின் பேரில், செயல்பாடுகளை நெறிப்படுத்துதல் மற்றும் ஆணைக்குழுவின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் ஒரு வேலை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு ஆசிய மன்றத்தினால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படுகிறது. ஆலோசகர் ஒரு இடைக்கால அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

**10. மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுடனான ஒரு கூட்டம்**

செலவினங்களுக்காக அரசு வழங்குகின்ற ஒதுக்கீடு மற்றும் கட்டுநிதி விடுவிப்பு குறித்து 2019 ஜூலை 26 அன்று நிதி ஆணைக்குழுவில் ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்கள் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் நிதி ஆணைகுழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக சில ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளமுடியவில்லை.

ஆளுநர்கள் முன்மொழிந்து ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் வெளிபடுகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுத்துச்செல்ல உடன்பாடு காணப்பட்டது.

பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட பொறுப்புகளின் கீழ் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, அந்தந்த நிரல் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட சில நிதியின் மூலம் மாகாணங்களுக்குத் திருப்புவதற்கும் மாகாண சபைகளுக்கு அரசாங்க மூலதன மானியத்தை அதிகரிக்கவும் வேண்டிய அவசியம் உள்ளது.

**11. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம்**

மூன்றாம் காலண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் 27 ஆம் திகதி இடம்பெற்றது.

**12. மாகாண கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தமான சுட்டிக்காட்டல்களை தயாரித்தல்**

மூன்றாம் காலாண்டு பகுதிகளில், வடமேல், மத்திய மற்றும் வட மத்திய மகாண சபைகளின் 2018 ஆம் நிதி ஆண்டிடற்கான கணக்காய்வு அறிக்கைகளை தேசிய கணகாய்வு அலுவலகத்திடமிருந்து நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றது. இவ்வறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வு அவதானிப்புகளின் குறித்துறைப்புக்கள் ஆணைக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அதன்பின் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தொடர் நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

**13. மனிதவள அபிவிருத்தி**

**13.1 அலுவலர்களின் திறன் விருத்தி**

காலாண்டு பகுதியில் ஆணைக்குழு கொள்கை ரீதியாக விருந்தினர் விரிவுரையாளர்களை ஊழியர்களின் திறனை வளர்ப்பதற்கு அழைக்கின்றது. ஒரு விருந்தினர் சொற்பொழிவு மட்டும் நடைபெற்றது.

| பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|
| 1. கலாநிதி.வின்யா ஆரியரத்ன | சமமான பிராந்திய அபிவிருத்தி | 2019.09.19 |

**13.2 அலுவலகர்களின் பயிற்சி**

மூன்றாம் காலாண்டில் பின்வரும் அலுவலகர்கள் பயிற்ச்சி நிகழ்சிகளில் பங்குபற்றினர்

- **உள்ளூர் பயிற்சி**

| பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|
| 1. திரு S.M.R.S. பண்டார | நிலைத்து நிற்க கூடிய அபிவிருத்தி இலக்கு சம்பந்தமாக OPA வால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கூட்டம் | 2019.09.18 |
| 2. S.D.C.சந்திரசிறி | அரச ஊதிய முறை (payroll system) | 2019.09.04 / 2019.09.05 / 2019.09.06 |
| 3. திருமதி. திலோகா அபயசேகர<br>செல்வி. சந்திரா மாலனி<br>திருமதி. நிமாலி ரத்னாயக | இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருளியல் ஆராய்ச்சி | 2019.07.05 - 2019.09.06 ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் மட்டும் |
| 4. திருமதி. K.A.M. லங்காணி | அரச துறையில் கொள்முதல் செயல்முறை | 2019.07.18-2019.07.26 |

- **வெளியூர் பயிற்சி**

| பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|
| 1. திரு. P.R.N. சுஜீவ | சீனாவின் அபிவிருத்தி அனுபவம் மற்றும் அதன் சீர்திருதங்கள் மற்றும் இலங்கை – சீனாவிற்கான கொள்கைகளுக்கான திறப்புக்கள் பற்றிய கருத்தரங்கு | 2019.09.02 - 2019.10.01 |
| 2.செல்வி. T.G. சந்திரா மாலனி<br>திருமதி. A.W.K.S.ரணசிங்க | சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு பற்றிய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அமைச்சுக்களின் கருத்தரங்கு – 2019 | 2019.09.18 - 2019.09.24 |
| 2. திரு . V.மகேந்திரராஜா | பாலின சமத்துவ பாதீடு பற்றிய ஒத்துழைப்பு நாடுகளின் கருத்தரங்கு - இந்திய அரசு | 2019.09.11 - 2019.011.12 |

**14. ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம்**

பின்வரும் உத்தியோகத்தர்கள் மூன்றாம் காலாண்டில் - 2019 நிதி ஆணைக்குழுவில் இணைந்து கொண்டனர்

| பெயர் | நிலை | இணைந்த திகதி |
|---|---|---|
| 1. திருமதி . S.K. கொத்தலாவல | பிரதம கணக்காளர் | 2019.07.02 |
| 2. செல்வி.. S. A. ஹன்சனி சந்தமாளி | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 2019.07.01 |
| 3. திரு .D.V.U. குணவர்த்தன | அலுவலக உதவி சேவையாளர் - தற்காலிகம் | 2019.08.01 |

பின்வரும் உத்தியோகத்தர் நிதி ஆணைக்குழுவிலிருந்து இடமாற்றம் பெற்றார்

| பெயர் | நிலை | இடமாற்ற திகதி |
|---|---|---|
| 1. திரு .சுசந்த ரணசிங்க | பிரதம கணக்காளர் | 2019.07.02 |

மேலும், 2019 ஆகஸ்ட் 1 ஆம் திகதி 15 பட்டதாரி பயிலுனர்கள் நிதி ஆணைகுழுவில் இணைந்துகொண்டனர்

**15. ஊழியர்களின் கற்கை**

கடமைகளை நிறைவேற்றும் பணியில், நிதி ஆணைக்குழு தொடர்ந்து ஊழியர்கள் ஆய்வுகள் / ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது.

| பொறுப்பான அதிகாரி | கற்கை விடயங்கள் |
|---|---|
| சமச்சீர் பிராந்திய அபிவிருத்தி குறிகாட்டிகள் பற்றிய ஒரு கற்கை(நடந்து கொண்டிருக்கிறது) | திரு. S.M.R.S. பண்டார பணிப்பாளர் (திட்டமிடல் )<br>திருமதி. நிமாலி ரத்னாயக-புள்ளிவிபர அலுவலகர் |
| நிதி ஒதுக்கீட்டிற்கான ஒவ்வொரு துறைக்கும் பகுத்தறிவு குறிகாட்டிகளை உருவாக்குதல் | திரு. S.M.R.S. பண்டார - பணிப்பாளர் (திட்டமிடல் )<br>திரு. மகேந்திரராஜா-பணிப்பாளர்(கொள்கை ஆராய்ச்சி)<br>திருமதி. நிமாலி ரத்னாயக - புள்ளிவிபர அலுவலகர் |
| புவியியல் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறுமை தொடர்பான உறவு | திருமதி. நிமாலி ரத்னாயக - புள்ளிவிபர அலுவலகர் |
| கல்வி மற்றும் சுகாதார துறைக்கான கற்கைகள் | திருமதி. திலோகா அபயசேகர- உதவி பணிப்பாளர்<br>திருமதி. இந்திராதேவி – உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |

**16. பெறுபேறு அடிப்படையிலான முகாமைதுவத்தை நோக்கிய சமூக அபிவிருத்தியை உள்ளடக்கிய கருத்தரங்கு மற்றும் ஆலோசனைகள்**

யுனிசெப் (unicef) நிறுவனமானது கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களதுடன் கூட்டிணைந்து “பெறுபேறு அடிப்படையிலான முகாமைதுவத்தை நோக்கிய சமூக அபிவிருத்தியை உள்ளடக்கிய” கருத்தரங்கு ஒன்றினை 2019 ஜூலை 9 – 12 காலப்பகுதியில் நடத்தியது. பணிப்பாளர் - மாகாண திட்டமிடல் அபிவிருத்தி மற்றும் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்.

கருத்தரங்கு தொகுதிகளின் உள்ளடக்கம்: பெறுபேறு அடிப்படையிலான முகாமைத்துவ கட்டாயத்தின் அடிப்படை கருத்து, உள்ளடங்களான ஒழுங்கு கட்டமைப்பு , பங்குபற்றல் தந்திரோபாய திட்டமிடல் மற்றும் காரண பகுப்பாய்வு, கோட்பாடு மற்றும் பெறுபேற்று கட்டமைப்பு மற்றும் அளவீடுகளின் கட்டமைப்பு ,பெறுபேற்று கண்காணிப்பு, பெறுபேற்று அறிக்கை, மதிப்பீடுகள்,பெறுபேற்று அடிப்படையிலான முகாமைத்துவ கட்டமைப்பின் கீழ் நிறுவனமயமாக்கல் , மற்றும் குழு வேலைகள்.

**17. கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றல்**

- நிலைத்திருபதற்கான இலங்கை மற்றும் தாய்லாந்தின் பங்குடமை – தலைவர்
- ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கம் : வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் – தலைவர்
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சக்தி போட்டி - செல்வாக்கு மற்றும் உணர்வு – தலைவர்
- "இந்தியாவின் தற்காப்பு தாக்குதல் தந்திரோபாயம் : புதிய சாதாரணம் ?"- தலைவர்
- இலங்கைக்கு மில்லினியம் சேலஞ்ச் கார்ப்பரேஷன் காம்பாக்ட் லேண்ட் கிராண்ட் - தலைவர்
  (The Millennium Challenge Corporation Compact Land Grant to Sri Lanka – Chairman)
- நிலையான தேசிய அபிவிருத்தியில் தொழில் வல்லுனர்களின் பாத்திரம் - தலைவர்
- அரச நிதி முகமைத்துவ கருத்தரங்கு - தலைவர்
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் கல்வி துறைக்கான கூட்டம் -தலைவர்
- இலங்கை அரசின் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் ஆதன வள பயன்பாட்டில் அவர்களின் செயல் திறனும்
- இலங்கையின் எரிசக்தி துறையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் எரிசக்தி தொழில் ஒழுங்குமுறையின் அதிகாரத்தை கையகப்படுத்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள் - தலைவர்
- காவல்துறையின் சுதந்திரம் – தலைவர்
- சூரிய மின்சக்தி துறையில் புதிய போக்குகள் மற்றும் தளபாடங்கள் மற்றும் உள்அழகு துறையில் புதிய போக்குகள் - தலைவர்
- கடல் வள பயன்பாடு - தலைவர்
- குழந்தை சிறுபராய அபிவிருத்திக்கான பயிற்சிப் பட்டறை - தலைவர் மற்றும் செயலாளர்
- நிலைபெறும் தேசிய அபிவிருத்தியில் தொழில் வல்லுனர்களின் பாத்திரம் சம்பந்தமான கருத்தரங்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் (மாகாண பணிப்பாளர் திட்டமிடல்)

- உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாணசபைகள் நிர்வாகம் சம்பந்தமான கலந்துரையாடல் செயலாளர் மற்றும் உதவிப்பணிப்பாளர்
- உள்ளூராட்சி மன்ற மேம்படுத்தல் துறை திட்டம் சம்பந்தமான சந்திப்பு – செயலாளர்
- உள்ளூராட்சி மன்ற துணைத் திட்டம் சம்பந்தமான சந்திப்பு – செயலாளர்
- குழந்தை பராமரிப்பு இல்லங்களுக்கான வழிகாட்டுதல்களுக்கான கலந்துரையாடல் – செயலாளர்
- பிரதம செயலாளர்கள்/மாவட்ட செயலாளர்களின் மாநாடு -செயலாளர்,பிரதம கணக்காளர் உதவிப்பணிப்பாளர் (PDP)
- பொதுவான திட்டமிடலுக்கான அடித்தளம் சம்பந்தமான சந்திப்பு -செயலாளர்
- உள்ளூராட்சி மன்ற துணைத் திட்டம் சம்பந்தமான சந்திப்பு – செயலாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- நிதி ஆணைக்குழுவில் பயிற்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தல் -செயலாளர்,புள்ளிவிபர அலுவலகர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- மாகாண வீதி அபிவிருத்தி திட்டம் -செயலாளர்
- இரண்டாம் நிலை நகர நிலைதகு அபிவிருத்தி – செயலாளர்
- மாதிரி மதிப்பாய்வு சிட்டை( சம்பந்தமான கலந்துரையாடல் -பணிப்பாளர்

- சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் வதிவிடம் சம்பந்தமான ஆர்வமுள்லோரின் சந்திப்பு பணிப்பாளர் - (கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியிடுகை)
- பாலின சமத்துவம் பாதீடு சம்பந்தமான மாநாடு பணிப்பாளர் - (கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியிடுகை)
- வட மாகாணத்தின் கலாச்சார பிரிவினை கலாச்சார திணைக்களமாக மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் - பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்

- 2019 ஆம் ஆண்டின் மாகாண பதீடிலிருந்து சப்ரகமுவ மாகாண வீதி, பயணிகள் மற்றும் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஒதுக்கீடு சம்பந்தமான கலந்துரையாடல் - பணிப்பாளர் மற்றும் உதவிப்பணிப்பாளர்
- போக்குவரத்து இணைவு மற்றும் சொத்து முகமைத்துவ திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் - பணிப்பாளர் மற்றும் உதவிப்பணிப்பாளர்
- மத்திய, மேல், வடமேல் மற்றும் வட மத்திய மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆளணி விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் - பணிப்பாளர் மற்றும் உதவிப்பணிப்பாளர்
- வளரும் நாடுகளுக்கான சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு குறித்த 2019 அமைச்சர்களின் பயிற்ச்சி பட்டறை - உதவி பணிப்பாளர் (மாகாண அபிவிருத்தி திட்டமிடல் )மற்றும் உள்ளக கணக்காய்வாளர்

**18. ஆணைக்குழு கூட்டங்கள்**

பின்வரும் திகதிகளில் காலாண்டுக்கான ஆணைக்குழு கூட்டங்கள் நடைபெற்றன

- 15.08.2019
- 24.08.2019

- ஒழுங்கு முறையாக ஒவ்வொரு ஆணைக்க்குழு கூட்டத்திற்கும் முன்னதாக ஆணைக்குழுவின் உப குழுக்கள் சந்தித்தன
- பிரதான அலுவலர் குழு கூட்டங்கள் வாராந்தம் நடைபெற்றன.

19. ஆணைக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள்

- 2020 ஆம் ஆண்டிற்கான மாகாண மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்களின் பரிந்துரைக்கான ஒப்புதல்கள்
- மூலதன செலவுக்கான ஒதுக்கீடுகளின் கூட்டு குறியீட்டில் வறுமை தலை எண்ணிக்கை விகிதத்திற்கு பதிலாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொகை பயன்பாடு
- மாகாண சபைகள் அவர்களின் மாகாணசபைகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைக்கான நிதி ஆணைக்குழு உதவியுடன் இறை கொள்கை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த ஆய்வு.
- 2020 ஆம் ஆண்டு முதல் வருவாய் மேம்பாட்டு முன்மொழிவு மாகாண சபைகளிடமிருந்து தங்கள் நிதி கோரிக்கையை சமர்ப்பிக்கும் போது கேட்கப்பட வேண்டும்

**20. உப குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள்**

- தேவை மதிப்பீட்டுக்கான துறை ரீதியான சந்திப்புக்களை ஒழுங்கு செய்தல்
- ஒருங்கிணைந்த திட்டமிடல் முறைமை சம்பந்தமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்துடனான சந்திப்பு
- நிதி ஆணைக்குழுவின் தரத்தினை அபிவிருத்தி செய்தல்
- நிதி ஒதுக்கீடுகளில் ஒவ்வொரு துறைக்காகவும் நியாயமான சுட்டிகளை அபிவிருத்தி செய்தல்
- நிதி உள்ளீடுகளுக்கான சந்திப்பு
- மாகாணங்களில் நிரல் அமைச்சுகளால் ஏற்படும் செலவினங்களை தீர்மானித்தல்